செய்தி வெளியீடு எண் :1558 நாள் : 03.08.2023

# செய்தி வெளியீடு

## மாபெரும் தமிழ்க் கனவு – தமிழ் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கல்லூரி மாணவர்களிடையே முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு (இ.ஆ.ப–ஓய்வு) அவர்கள் உரை நிகழ்த்தினார்

தாம்பரம் சென்னை கிறித்துவக் கல்லூரியில் ஆகஸ்ட் 3–ம் தேதி நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு – தமிழ் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கல்லூரி மாணவர்களிடையே முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு (இ.ஆ.ப–ஓய்வு) அவர்கள் உரை நிகழ்த்தினார். அப்போது 20 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து தனக்கும் ஒரு கனவு இருக்கிறது என்று கூறினார்.

கல்லூரி மாணவர்களுக்கான மாபெரும் தமிழ்க் கனவு – தமிழ் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியானது எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார். தமிழ்நாட்டு இளைஞர்களிடம், தமிழ்நாட்டைப் பற்றிய விவரங்களையும், புரிதல்களையும் உருவாக்க வேண்டும். அவர்களிடம் தமிழ் மரபு, பண்பாடு குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என்பதுதான் இந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்று விளக்கமளித்தார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

மழலைகள் பிறக்கிற போதே பெற்றோர்களின் முதலீடுகளாக கருதப்படக்கூடாது. அவர்கள் மதிப்பெண் வாங்குகிற இயந்திரங்களாக இருக்கக்கூடாது. அவர்கள் மீது பாடத் திட்டங்களைத் திணிக்கக் கூடாது. பூக்களைப் போல, தென்றலைப் போல அவர்களுக்கு அட்சரங்களை அறிமுகப்படுத்த வேண்டும். ஆசான்கள் ஒவ்வொருவரும் தங்கள் மாணவர்களை சாதனையாளர்களாக ஆக்குவதற்கு தகுதிப்படுத்த வேண்டும். அதிகாரிகள் என்பவர்கள் துயரமடைந்தோர்களின் குரல்களுக்கு செவி சாய்க்க வேண்டும். அவர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும்.

எல்லோருமே உழைப்பை நேசிக்க வேண்டும். கடமை ஒன்றே முக்கியம் என்று கருத வேண்டும். படைப்பாளிகள் ஏழை, எளியோரின் வாழ்க்கையை தங்களின் படைப்புகள் வாயிலாக இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். எல்லா நிலையிலும் சகோதரத்துவம் தழைத்தோங்க வேண்டும். புத்தாக்க சிந்தனை மேலோங்க வேண்டும். மாணவர்கள் தொழில் முனைவோர்களாகவும், சமூக ஆர்வலர்களாகவும் உருவாக வேண்டும். தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகிலேயே தனித்துவம் மிக்கவர்களாக இருக்க வேண்டும்.

800 ஆண்டுகளுக்கு முன்பு கிழக்காசிய பிராந்தியத்தில் குளிர் காய்ச்சல் ஏற்படுத்தும் வகையில் வலிமையான படை பலம் கொண்டவர்களாக சோழர்கள் திகழ்ந்தனர். ரோமாபுரியோடும், கிரேக்கர்களோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் சங்க காலத் தமிழர்கள்...

இன்றைய உலகச் சந்தையிலும் அவ்வாறு தமிழ்நாட்டிற்கென்று தமிழ்நாட்டில் தயாராகும் உற்பத்திப் பொருள்களுக்கென்று ஒரு தனிப் பெருமையை ஏற்படுத்த வேண்டும். எந்தச் செயலையும் ஆழ்ந்து செய்ய வேண்டும். அதை அர்ப்பணிப்போடு செய்ய வேண்டும் என்று மாணவர்களிடம் அவர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் மாணவர்களின் கேள்விகளுக்கும் அவர் பதில் அளித்தார். மாணவர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில், சமூக முன்னேற்றத்திற்கான படிநிலையாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் ₹புதுமைப்பெண்' திட்டத்தை அவர் குறிப்பிட்டார். மாணவர்கள் மன அழுத்தத்தைத் தவிர்க்க மிடுக்கு பேசி (ஸ்மார்ட்போன்) பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு. ஏ.ஆர். ராகுல்நாத், இ.ஆ.ப., தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி ஆர். அழகு மீனா, இ.ஆ.ப., சென்னை கிறித்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பால் வில்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in